අතුරුදහන් වූ තැනැත්තන් පිළිබඳ කාර්යාලය
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
**OFFICE ON MISSING PERSONS**

**ஊடக வெளியீடு** **28 டிசம்பர் 2018**

**மன்னாரில் பெரும் மனித புதைகுழிகளிலுள்ள எச்சங்களை அய்வு செய்வதற்கு காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் உதவும்**

2018 டிசம்பர் 18ம் திகதி முதல் 20ம் திகதிவரை காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP) மன்னார் நகரில் சதொச கட்டிடத்தில் அமைந்துள்ள பாரிய மனித புதைகுழியிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட ஆறு எலும்பு மாதிரிகளை தேர்ந்தெடுக்கும் பணிமுன்னெடுப்பை அவதானித்தது. (வழக்கு இலக்கம் B/232/2018) இவ்விடத்தில் மாதிரிகள் தெரிவு செய்யும் முன்னெடுப்புக்கள் மன்னார் மாஜிஸ்திரேட் நீதிவான் மாண்புமிகு டி. சரவணராஜா அவர்கள் மேற்பார்வையில் நடைபெற்றது. மாதிரிகள் தெரிவு செய்யப்பட்ட குழுவானது சட்ட மருத்துவ ஆலோசகர் (ஜே. எம். ஓ), களனி பல்கலைக் கழகத்தின் தொல்லியியல் துறை பட்டப்படிப்பின் கற்கை நிலையம், பொலிஸ் அதிகாரிகள் (குற்றச் செயல் நடைபெற்ற இடத்தின் அலுவலர்கள் - குற்றப் புலனாய்வு கிளை), அரச பகுப்பாய்வு திணைக்களம், ஆகியோரது பிரதிநிதிகளையும் உள்ளடக்கியுள்ளது. OMP (காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்) ஆணையாளரகள் திரு. மிராக் ரஹீம் மற்றும் திரு க. வேந்தன் ஆகியோர் அவதானிகளாக பங்குபெற்றனர். காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களைப் பிரதிநிதிப்படுத்தும் சட்டத்தரணிகளும், பிரஜைகள் குழு உறுப்பினர் ஒருவரும் கூட பார்வையாளர்களாக சமூகமளித்தனர்.

ரேடியோ கார்பன் திகதி அனுமானம் என்பது எலும்பு மற்றும் பல் மாதிரிகளில் உள்ள கார்பன்-14 மூலகத்தின் அளவினை வைத்து ஒரு மிருகமோ அல்லது தாவரமோ எக்காலத்தில் உயிர்வாழ்ந்தது என்பதை உறுதிப்படுத்தும் ஒரு முறைமையாகும். தொல்லியல் துறையிலும் தடயவியல் துறையிலும் மனித எச்சங்களின் வாழ்நாட்களை கண்டுபிடிக்கும் ஒரு பரிசோதனை முறையே இது. மன்னார் பாரிய மனித புதைகுழிகளில் கண்டெடுக்கப்பட்ட மாதிரிகள் பொம்ப் பல்ஸ் கார்பன் 14 எனப்படும் தொழில்நுட்ப முறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற வெளிநாட்டிலுள்ள ஓர் ஆய்வுகூடத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இக்குறிப்பிட்ட பொம்ப் பல்ஸ் கார்பன் 14 முறையானது இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இறந்த ஒருவருடைய எலும்புக்கூடு அவர் எக் குறிப்பிட்ட கால கட்டத்தில் இறந்தார் என்பதை துல்லிய முறையில் காண்பிக்கும்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சட்ட மருத்துவ ஆலோசனை அதிகாரி கலாநிதி இராஜபக்ச அவர்கள் . “118 வேலைநாட்கள் பணியின் பின்னர் நாம் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோரது இருநூற்று எழுபத்தெட்டு எலும்புக்கூடுகளை அகழ்ந்தெடுத்துள்ளோம். எலும்புகளில் சிலவற்றில் சிதைவுகள் இருக்கின்ற அதே வேளையில் மேலதிக புலனாய்வின் பின்னரே இச்சிதைவுகள் மரணத்தின் பின் ஏற்பட்டவையா அல்லது மரணத்திற்கு முன் ஏற்பட்டவையா என்றும் அவை மரணத்திற்குக் காரணமாக அமைந்தனவா என தீர்மானிக்க முடியும்” என்று கூறியுள்ளார். மேலும் அவர் “எமது பணியானது மரணத்திற்கான காரணத்தையும், மரண நிகழ்விற்குப் பின்னதான காலத்தையும், இது நிகழ்வதற்கான சூழல்கள், நபர்களின் குறிப்பிட்ட அடையாளத்தையும், அவை எல்லா எலும்புக்கூடுகளும் ஒரே காலகட்டத்தைச் சேர்ந்தவையா அல்லது வித்தியாசமான காலகட்டங்களைச் சேர்ந்தவையா என்பதினையும், இவ்விடத்தின் முழுமையை பாதுகாப்பதோடு அவை பாதுகாக்கப்படும் அலுவலக இணைப்புமுறையையும் இதர சான்றுகளையும் காத்துக்கொள்ள வேண்டும்” என்றும் தமது கருத்தை தெரிவித்தார். கலாநிதி இராஜபக்ச புலனாய்வு குழுவிற்கு தலைமை தாங்க, அவருக்கு உதவியாக இருக்கும் பேராசிரியர் ராஜ் சோமதேவா தொல்லியல் குழுவிற்குத் தலைமை தாங்குகிறார்.

மாறுபட்ட பரப்பளவுகளையும் செங்குத்தான தளங்களை பிரதிநிதிப்படுத்த ஆறு மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டன. இவ்விடத்தில் முழுமையான மனித எலும்புக்கூடுகளும் பல்வகை கலப்பு எலும்புகளுமாக மனித எச்சங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. முழுமையான எலும்புக் கூடுகளிலிருந்து ஒரு பல்லும் துடையெலும்பின் ஒரு பகுதியும் தெரிவு செய்யப்பட்டன. கலவையான எலும்புகள் மத்தியிலிருநது துடையெலும்பு அல்லது அது கிடைக்காதிருப்பின் ஒரு பல் தெரிவு செய்யப்பட்டன. இம் மாதிரிகள் மூன்று நாட்களாகப் பிரித்தெடுக்கப்பட்டு, துப்புரவு செய்யப்பட்டு, உலர்த்தப்பட்டு பின்னர் வகைக்குறிப்பு இடப்பட்டன. பரிசோதனைக் கூடத்தில் சோதிக்கப்பட்ட பின் பரிசோதனையின் முதற்கட்ட ஒன்றிணைப்பு, இதர சோதனை அறிக்கை மற்றும் இதர கண்டுபிடிப்புக்களோடு, அகழ்வறிக்கை புலனாய்வு குழுவினால் மாஜிஸ்திரேட் நீதிவானிடம் கையளிக்கப்படும்.

2016 ஆம் ஆண்டு 14ம் இலக்க (காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தை தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுவதிலும் பற்றிய) சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் காணாமற் போனவர்களைத் தேடி அவர்கள் தற்போதிருக்கும் இடத்தினை அறியும் பணிப்பாணையைக் கொண்டுள்ளது. அதன் புலனாய்வு அதிகாரங்களின் கீழ் OMP அலுவலகத்திற்கு சந்தேகத்திற்கிடமான குழிகளில் அகழ்வாராய்ச்சியின் போதும், மனித உடல் எச்சங்களைத் தோண்டி எடுக்கும்போதும் அவதானிகளாயிருக்க மாஜிஸ்ரேட் நீதிவான் நீதிமன்றிற்கு விண்ணப்பிக்கும் அதிகாரம் உண்டு. OMP அலுவலகத்தினர் அவதானிகளாக செயற்பட 2018 ஆனி 4ம் திகதி சமர்ப்பித்த விண்ணப்பத்தை மாண்புமிகு மன்னார் மாஜிஸ்ரேட் தீதிவான் ஏற்றுக்கொண்டபின் அவர்களும் அத்தினத்திலிருந்து அவதானிகளாக செயற்படுகின்றனர்.

புலனாய்வுக்கான தம் ஆதரவின் ஒரு அங்கமாக கார்பன் பரிசோதனைக்கான நிதி உதவியை OMP தந்துதவுகின்றது. மாதிரிகள் சேகரிப்பதற்கு முன்னதாக OMP அவற்றினைத் தெரிவு செய்வதற்கும், பதிவு செய்வதற்குமான வழிமுறைகளை பரிந்துரைத்துள்ளது. மாதிரிகளைச் சேகரிக்கும்போது, அவற்றிற்கான பொறுப்பு கூறவும், வெளிப்படைத்தன்மையைக் காத்துக் கொள்ளவும், காணாமற் போனவர்கள் அல்லது காணாமற் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் அவ்விடத்தில் இருப்பதை உறுதிசெய்ய வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளரான திரு. சாலிய பீரிஸ் அவர்கள் ‘‘உண்மையை நிலைநிறுத்துவதிலும் ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்ட சூழ்நிலைகளை உறுதிப்படுத்துவதற்கும், அவர்களுக்கேற்பட்ட கதியையும் காண்பதில் OMP அலுவலகத்தின் அர்ப்பணிப்பு தொடர்கிறதென்றும், மன்னார் பாரிய புதைகுழியிலிருந்து அகழ்ந்தெடுக்கப்படும் எச்சங்களை புலனாய்வு செய்வதற்கு OMP உதவுவது தவிர்க்க முடியாததாகும்’’ எனவும் தமது கருத்தை வெளிப்படுத்தினார். மேலும் அவர் 2018 ஆடி மாதம் முதல் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது அகழ்வாராய்ச்சி குழுவினரது உணவு, தங்குமிட வசதி ஆகியவற்றிற்கான நிதியை தந்துதவியதோடு, புதைகுழிக்கு மேலாக தார்ப்பாய் துணி விரித்து அந்நிலம் பருவகால மழையினால் பாதிக்கப்படாமலிருப்பதை உறுதிப்படுத்தியுள்ளதாகவும், இப்பணிகளில் உயர்ந்த தரத்தை உறுதிப்படுத்தி புலனாய்வு முன்னெடுப்பில் பொதுமக்கள் நம்பிக்கையை நிச்சயப்படுத்திக் கொள்ளும் அவசியத்தை அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்து வலியுறுத்தியதாகவும் குறிப்பிட்டார்.